

**Dr. S. Balasubramanian**
Professor and Director
School of Tamil and cultural studies
Tamil Nadu Open University
Email: drbharathibalan@gmail.com

Prof. S. Balasubramanian is serving as the Professor and Director School of Tamil and cultural studies of Tamil Nadu Open University. He also holds the Position of Chairperson of the Faculty of Indian and Foreign Languages.

Prof. S. Balasubramanian got his Masters Degree in Tamil and Doctorate Degree from the University of Madras. He also has a Masters Degree in Journalism and Mass Communication, awarded by Madurai Kamaraj University, besides Bachelor Degree in Education (B.Ed.) from Annamalai University

He has around 30 years of distinguished service in the field of Teaching and Research. Prof. S. Balasubramanian has been working in Tamil Nadu Open University since 2004 and has put up around thirteen years of service as Professor. Under his able guidance 10 Research Scholars have been awarded Ph.D, degree and 24 students got their M.Phil degrees.

Prof. S. Balasubramanian, author of 42 books, has presented more than Fifty Research Papers in different fora. Besides, he has penned and published more than 100 scholarly articles. He has contributed 40 Textbooks for school students, non-formal learners and University students.

He has organised and co-ordinated several State level, National and International level seminars and workshops.

Prof. S. Balasubramanian has presented many Endowment Lectures in different Universities, besides participating in invited Lecture programs as a special speaker. He has been a Resource person for various orientation and refresher courses organised by HRDC of University Grants Commission (UGC).

Prof. S. Balasubramanian is also a notable creative writer in Tamil. By assuming a pseudonym "*Bharathi Balan", he has* written many literary works in different genres including short stories, novels and critical essays.

The Government of Tamilnadu awarded him the prestigious **Mahakavi Bharathi Award** in 2018 recognising his contributions to Tamil literature, and this award was presented to him by the Hon'ble Chief Minister of Tamil Nadu. One of his creative works has won the State Government's prize for the best literary work in 2012. He is the recipient of many awards including the State Bank of India Award 2005, Tirupur Tamil Sangam Award 1999, Abdul Kalam Award 2017, Arivu Kalanjiyam Award 2017, and Ilakkiya Sinthanai Award.

Prof. S. Balasubramanian served as a Member of the Vice-Chancellor Officiating Committee of Tamil Nadu Open University and Tamil University. He has also served as in-charge of the Registrar, Controller of Examinations, Director (Research), Director (Curriculum Development Center - CDC), and Finance Officer at Tamil Nadu Open University. He has also served as a member of Syndicate as well as Senate in Tamil Nadu Open University and Tamil University.

Prof. S. Balasubramanian was a member of the General Council of Sahitya Academy, the National Literary body functioning under the Ministry of Culture, Government of India. He was a member and chairperson of the committee for Tamil Curriculum Development of National Institute of Open Schooling. He is a member in the selection committee for the Award of **Saraswati Samman,** instituted by K.K. Birla Foundation.

Prof. S. Balasubramanian has served as Member of Academic Council of Thiruvalluvar University and Planning Board of Periyar University. He has also served as Member of Administrative Council, Education Committee and Planning Board, of Tamil Nadu open University.

Prof. S. Balasubramanian has rendered valuable contributions to the curriculum construction committees of more than 10 higher educational institutions including Tamil University (Thanjavur), Alagappa University (Karaikudi), Sri Venkateswara University (Tirupati), Kozhikode University (Kerala).

More than ten scholars have undertaken research studies on the creative works of Prof. S. Balasubramanian(Bharathibalan), leading to the award of Degrees of Ph.D and M.Phil at Various Universities in Tamil Nadu. Further, his creative works have also been included in the curriculum of Both Bachelor and Master Degree courses in various Universities and Colleges in Tamil Nadu and Kerala.



**முனைவர் சு. பாலசுப்பிரமணியன்**
பேராசிரியர் மற்றும் இயக்குநர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை-15

முனைவர் சு. பாலசுப்பிரமணியன் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலத்தில் பேராசிரியர் & இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். இந்திய மற்றும் அயலக மொழிகள் புலத்தின் தலைவராகவும் உள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத்தமிழ்ப் பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் M.A (JMC) பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எட்., பட்டமும் பெற்றுள்ளார்.

முப்பதாண்டுகள் கல்வி – ஆராய்ச்சிப் பணிகளில் அனுபவம் பெற்றவர். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 2004 ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார்; இதில் பேராசிரியர் நிலையில் 13 ஆண்டுகள் பணி. இவருடைய மேற்பார்வையில் 10 ஆய்வாளர்கள் முனைவர் பட்டமும், 24 மாணவர்கள் எம்ஃபில் பட்டமும் பெற்றுள்ளனர்.

இதுவரை 42 நூல்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளும் எழுதியுள்ளார். பல்கலைக்கழக நிலையிலும் பள்ளி, பள்ளிசாராக் கல்வி நிலைகளிலும் 40 பாடநூல்கள் இவரின் பங்களிப்பாகும்.

பன்னாட்டு (International) நிலையிலும், தேசிய அளவிலும் (National) மாநில அளவிலும் (State Level) பல்வேறு கருத்தரங்குகள், பயிலரங்குகள் (Workshops) நடத்தியுள்ளார். கருத்தரங்குகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தளித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைச் சொற்பொழிவு (Endowment Lecture) சிறப்புச் சொற்பொழிவு (Invited Lecture) மற்றும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் UGC - HRDC–யின் சார்பில் நடத்தப்பெற்ற பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளில் வளமையராகக் கலந்து கொண்டு வகுப்புகள் எடுத்துள்ளார்-எடுத்து வருகிறார் (Resource Person for UGC – Orientation / Refresher Courses)

**'பாரதிபாலன்'** என்ற புனைப் பெயரில், சிறுகதை, புதினம், கட்டுரைகள் எழுதி வருகிறார்.

இவருடைய இலக்கியப் பங்களிப்பிற்காக 2018-இல் தமிழ்நாடு அரசு **'மகாகவி பாரதியார்' விருது** வழங்கியது. தமிழ்நாடு முதலமைச்சர் இந்த விருதினை வழங்கினார். 2012, தமிழ்நாடு அரசு சிறந்த நூலுக்கான பரிசினை வழங்கியது. பாரத வங்கி பேங்

விருது (2005), திருப்பூர் தமிழ்ச் சங்க விருது (1999), கலாம் விருது (2017), அறிவுக் களஞ்சியம் விருது (2017), இலக்கியச் சிந்தனை பரிசு உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும், சிறப்புகளையும் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சை - துணை வேந்தர் பொறுப்புக் குழு, Vice-Chancellor in Charge Committee Member (Exercising the Powers & Performing the Current Duties of the Vice - Chancellor) உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சி), இயக்குநர் (கலைத்திட்ட மேம்பாட்டு மையம்) மற்றும் நிதி அலுவலராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் 'ஆட்சிப் பேரவை'(Syndicate) உறுப்பினராகவும் நிதிக்குழு (Finance Committee) மற்றும் செனட் (Senate) உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இந்திய அரசின், பண்பாட்டுத் துறையின் சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகவும், இந்திய அரசின், மனிதவள மேம்பாட்டுத்துறையின் கீழ் இயங்கும் தேசியத் திறந்தநிலைப் பள்ளி நிறுவனத்தின் தமிழ்க் கலைத் திட்டக் குழுவின் (Tamil Curriculum Development – Committee) தலைவராகவும், உறுப்பினராகவும் செயலாற்றியுள்ளார். K. K. பிர்லா பவுண்டேஷன் **'சரஸ்வதி சம்மான்'** விருது தேர்வுக் குழுவிலும் உறுப்பினராக இருந்துள்ளார்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கல்விப் பேரவையிலும் (Academic Council) பெரியார் பல்கலைக்கழகத்தின் திட்டக்குழுவிலும் (Planning Board), தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு, கல்விக்குழு, திட்டக் குழுக்களிலும் உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப்பல்கலைக்கழகம்(தஞ்சை), அழகப்பா பல்கலைக்கழகம், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் - திருப்பதி, கோழிக்கோடுப் பல்கலைக்கழகம், கேரளம் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டக் குழுக்களிலும் பங்களிப்புச் செய்து வருகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இவருடைய படைப்புகளை ஆய்வு செய்து பத்துக்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் முனைவர் (Ph.D.,) பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) பட்டம் பெற்றுள்ளனர். மேலும் இளநிலை, முதுகலைத் தமிழ்ப்பாடத்திட்டங்களில் இவருடைய படைப்புகள் பாடநூல்களாக இடம்பெற்றுள்ளன.